தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) மாணவர்களின் கருத்தரங்கு -2020

வணிகக் கல்வி - I	32 T I	நேரம் - 2 மணித்தியாலம்

சுட்டெண்

அ. மிதுர்சன்
முகாமைத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைக் கழகம்

அறிவுறுத்தல்கள்

இவ் வினாக்கள் A, B ஆகிய பகுதிகளைக் கொண்டது.

பகுதி A 30 பல்தேர்வு வினாக்களையும் பகுதி B 20 குறு வினாக்களையும் கொண்டுள்ளது.

ஒரு விடைக்கு இரண்டு புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி- A

01) வர்த்தகம் மட்டுமல்ல ஒட்டுமொத்த வணிக செயற்பாடுகளிற்கும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்சென்ற ஒரு அடிப்படை காரணி பின்வருவனவற்றுள் எது?

1) கைத்தொழில் புரட்சி
2) இணையம்
3) இலத்திரனியல் வணிகம்
4) துணைநிலைச் சேவை
5) தொழில்நுட்பம்

02) புறச் சூழல் காரணிகள் வணிகத்தின் மீது பல்வேறு வழிகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. அவ்வாறு வணிகமும் அதன் செயற்பாடுகள் மூலம் இக் காரணிகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகத்தின பங்களிப்பு ஒன்று அல்லாதது?

1) மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவு செய்தல்
2) புத்தாக்கம் புனைதல்
3) தேசிய பொருளாதார விருத்தி
4) வணிகத்தின் பொருளாதாரச் சிக்கனம்
5) தொழில் உருவாக்கம்

03) பின்வருவனவற்றுள் வணிக நடவடிக்கை ஒன்றாகக் கருதப்படுவது?

1) அல்பிரட் வீட்டுத் தோட்டத்தில் இருந்து கிடைத்த மரக்கறிகளை அயலவருடன் பரிமாற்றுதல்.
2) விமல் என்பவர் தன்னுடைய 400000 ரூபா பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்றினை தன்னுடைய நண்பனிற்கு ரூபா 300000ற்கு விற்பனை செய்தல்.
3) பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றினைந்து மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை நடாத்துதல்.
4) ராயு சுத்தமான குடிநீரினை போத்தலில் அடைத்து அதனை தொடர்ச்சியாக 1L 60 ரூபாவிற்கு விற்பனை செய்து வருகிறார்.
5) சாந்தி தனது வீட்டுத் தோட்டத்தில் இருந்து கிடைத்த மரக்கறிகளை தொடர்ச்சியாக உணவிற்குப் பயன்படுத்துதல்.

www.ikedu.lk

04) வணிகத் தொழிற்பாடுகள் சில X நிரலிலும் அவற்றிற்குப் பொருத்தமான உதாரணங்கள் Y நிரலிலும் தரப்படுகின்றன.

தொழிற்பாடுகள் (Function) X	உதாரணங்கள் (Example) Y
1) நிர்வாகம்	A) உற்பத்தி பொருளின் விலையினைத் தீரமானித்தல்.
2) உற்பத்தி	B) 5s முறையினைப் பின்பற்றுதல்.
3) சந்தைப்படுத்தல்	C) தொழிலாளர்களுக்கான கோவைகளைத் தயாரித்தல்.
4) மனித வளக்கருமம்	D) கொடுப்பனவு முகாமைத்துவம்.

X நிரலில் காட்டப்பட்டுள்ள வணிகத்தொழிற்பாடுகளுக்கு பொருத்தமான Y நிரலிலுள்ள உதாரணங்களை சரியான முறையில் தெரிவு செய்க?

1. A,C,B,D
2. B,A,C,D
3. B,A,D,C
4. C,B,A,D
5. D,A,B,C

05) COVID-19 எனப்படுகின்ற கொரோனா வைரஸானது உலக நாடுகளையே அச்சுறுத்தியுள்ளது. இதன் தாக்கம் பின்வரும் எப் புறச்சூழல் காரணிகளுக்கு பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. என்பதனை தெரிக?

1) கொரோனாவினால் இறப்பு வீதம் அதிகரித்துச் சென்றமை. A. தொழில்நுட்ப சூழல்
2) தனிமைப்படுத்தல் சட்டங்கள் பிரகடப்படுத்தப்பட்டன. B. மக்கட் சூழல்
3) பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டமை. C. அரசியல் சட்ட சூழல்
4) மக்களின் பழக்கவழக்கங்களில் மாற்றம் ஏற்பட்டமை. D. சமூக கலாசார சூழல்
5) பொருயியல் மாணவர்களின் தொற்று நீக்கி இயந்திர கண்டுபிடிப்பு. E. பொருளாதார சூழல்

1. A,E,C,D,B
2. A,C,D,E,B
3. B,C,A,D,E
4. B,C,E,D,A
5. D,C,E,B,A

06) வணிகங்கள் நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஊழியர்களுக்கு வணிகங்கள் நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்பு ஒன்றினை தெரிக?

1. நியாயமான உழைப்பினைப் பெற்றுக் கொடுத்தல்.
2. உரிமைகளைப் பாதுகாத்தல்.
3. வேலை வாய்ப்பிற்கு பங்களித்தல்.
4. சமத்துவமான நிலை
5. நியாயமாக நடந்து கொள்ளல்.

www.ikedu.lk

07) சமூக கலாசார நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக வணிகங்கள் கவனம் செலுத்த வேண்டிய காரணி பின்வருவனவற்றுள் எது?

1. இடர் முகாமைத்துவம்.
2. கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் போது 6R எண்ணக்கருவினைப் பயன்படுத்துதல்.
3. உற்பத்தி செயன்முறையை ஊக்குவித்தல்.
4. புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தல்.
5. மனித மூலதனத்தை பராமரித்தல்.

08) வணிகத்தினுள் காணப்படுகின்ற மரபுகள், பாரம்பரியங்கள், பெறுமானங்கள், பழக்கம் மனப்பாங்கு போன்றவை தொடர்பில் கவனம் செலுத்துதல்.

1. வணிக ஒழுக்க நெறி ஆகும்.
2. வணிக விழுமியம் ஆகும்.
3. ஒழுக்க கோவை ஆகும்.
4. அமைப்பு கலாசாரம் ஆகும்.
5. சமூக கலாசாரம் ஆகும்.

09) பின்வரும் அட்டவணையானது சில வணிக நிறுவனங்களையும் அவற்றுடன் தொடர்புபட்ட காரணிகளையும் தருகின்றது.

வணிக நிறுவனங்கள்	தொடர்புடைய காரணிகள்
A. பொது வரையறுத்த கம்பனி	1) பங்குகளின் பெறுமானம் மாற்றமடையாது (பங்கு ஒன்றின் பெறுமதி 100/= ஆகும்.
B. பங்குடைமை	2)ஒவ்வொரு அங்கத்தவரும் அவர்கள் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் வாக்குகளைப் பெற்றுக் கொள்வர்.
C. கூட்டுறவு	3) 1918ம் ஆண்டின் வணிகப் பெயர் பதிவு சட்டத்தின் தாக்கம்.
D. அரச கம்பனி	4) அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாடு.
E.அரச திணைக்களம்	5) வரையறுக்கப்பட்ட லிற்றோ வாயு கம்பனி.

வணிக நிறுவனங்களுடன் தொடர்புடைய காரணிகள் முறையே இனங்கான்க?

1. A1,B2,C3,D5,E4
2. A2,B3,C1,D5,E4
3. A3,B4,C1,D2,E5
4. A5,B3,C2,D4,E1
5. A5,B1,C3,D5,E4

www.lkedu.lk

10) வணிகங்கள் இணைந்து செயற்படல் வணிகத்துறையின் புதிய போக்கொன்றாகும். இதில் ஒன்றினைத்தலின் பண்பு ஒன்றாக இனங்கானப்படுவது?

1. ஒரு கம்பனி இன்னொரு கம்பனியின் சாதாரண பங்கு மூலதனத்தில் கூடுதலான அளவினைக் கொள்வனவு செய்தல்.
2. கம்பனிகள் 2 அல்லது பல ஒன்று சேரந்து செயற்படல் ஆகும்.
3. ஒரு கம்பனி ஏனைய கம்பனிகளின் சொத்துக்கள் பொறுப்புக்களை கொள்வனவு செய்வதன் மூலம் புதிய வணிகம் ஒன்றாக இணைதல்.
4. இரண்டு அல்லது அதற்து மேற்பட்ட வணிகங்கள் பொதுவான முயற்சியில் ஈடுபடல்.
5. 1 மற்றும் 3 சரி

11) பங்குடைமைகளுடன் தொடர்புபட்ட வகையில் தவறான கூற்றை தெரிவு செய்க?

1. பங்குடைமையில் சட்ட ரீதியான ஆளுமை காணப்படுவதில்லை.
2. ஆகக் குறைந்த பங்குதாரரின் எண்ணிக்கை 2 ஆகவும் ஆகக் கூடிய பங்குதாரரின் எண்ணிக்கை 20 ஆகவும் காணப்படும்.
3. பங்குடைமை வணிகம் உரிமையாளரின் பெயரில் வரி செலுத்துகின்றன.
4. குறிப்பாக ஒரு வணிகத்தை நடாத்த பங்காளர்கள் உடன்படுதல் வேண்டும்.
5. 1890ம் ஆண்டு 24ம் பிரிவிற்கு அமைய பங்காளர்களிடையே இலாப நட்டம் சமமாகப் பகிரப்படும்.

12) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் வெற்றிக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களும் அவற்றின் நடவடிக்கைகளும் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

செயற்றிட்டம்	நடவடிக்கை
1. சுவன	A. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அனுசரணையுடன் சிற்றளவு வணிகக் கடன் திட்டம்
2. லிய இசுறு	B. விவசாயம், கால்நடை, சிறுகைத் தொழில், வியாபாரம் போன்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கு கடன் வழங்கும் திட்டம்
3. சஹன்யா	C. ஜப்பானிய வங்கியின் (**JBIC**) நிதி அனுசரணையுடன் தேசிய அபிருத்தி வங்கியானது மீள்நிதியிடல் மூலம் சிறு கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்.
4. சனச கடன் திட்டம்	D. மகளிர் சிற்றளவு முயற்சியாண்மை கடன் பிணைப் பாதுகாப்பு திட்டமுறை

இச் செயற்றிட்டங்களுக்கு பொருத்தமான பின்வரும் நடவடிக்கையை ஒழுங்கு முறையே தெரிக?

1. A,D,C,B
2. B,A,D,C
3. B,D,A,C
4. C,D,A,B
5. D,A,C,B

www.ikedu.lk

13) காசோலை ஒன்றின் முகப்பில் சிறப்புக் கோடிடலில் கைமாற்றத்தகாதது என்ற பயன்படுத்து தொடர்பில் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?

1. இவ்வாறான காசோலைகளை புறக்குறிப்பிடலின் பின் இன்னொருவருக்கு சாட்டுதல் செய்யமுடியாது.
2. இங்கு காசோலையின் முன்புறத்தில் உள்ள விடயங்கள் காசோலையின் பின்புறத்திலும் வரையுனியின் கையொப்பத்துடனும் காணப்படும்.
3. இக் காசோலையினை சாட்டுதல் செய்யும் போது சாட்டப்படுவோனுக்கு சாட்டுபவரை விட குறைந்த உரிமை காணப்படும்
4. இக் காசோலையினை சாட்டுதல் செய்யும் போது கூடிய உரிமை சாட்டுபவரை விட சாட்டப்படுவோனுக்கு உண்டு.
5. வங்கியின் கரும பீடத்தில் சமர்ப்பித்து நேரடியாகக் காசாக மாற்ற முடியும்.

14) வணிகர் ஒருவர் எதிர் நோக்க வேண்டியேற்படும் இடர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. உணவு பானவகை நஞ்சாவதால் நுகர்வோருக்கு ஏற்படும் பாதிப்பு
2. மின்னொழுக்கினால் ஏற்படும் பாதிப்பு
3. மோட்டார் வாகனத்தினால் ஏற்படும் பாதிப்பு
4. பெருந்தெருக்களில் பொருட்களை எடுத்துச் செல்லும்போது ஏற்படும் பாதிப்பு

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடர்கள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒப்பந்தங்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடைத் தொகுதி?

1. பொதுமக்கள் பொறுப்புக் காப்புறுதி/ மூன்றாம் நபர் காப்புறுதி/ தீ அபாயக் காப்புறுதி/ பயணச்சரக்கு காப்புறுதி
2. பயணச்சரக்கு காப்புறுதி/ மூன்றாம் நபர் காப்புறுதி/ களவபாயக் காப்புறுதி/ தீ அபாயக் காப்புறுதி
3. பொதுமக்கள் பொறுப்புக் காப்புறுதி/ தீ அபாயக் காப்புறுதி/ பூரண மோட்டார் வாகனக் காப்புறுதி/ பயணச்சரக்கு காப்புறுதி
4. ஆயுள் காப்புறுதி/ விபத்துக் காப்புறுதி/ மூன்றாம் நபர் காப்புறுதி/ வழிப்பணக் காப்புறுதி
5. ஊழியர் பொறுப்புக் காப்புறுதி/ தீ அபாயக் காப்புறுதி/ ஆயள் காப்புறுதி/ களவபாயக் காப்புறுதி

www.lkedu.lk

15) நாட்டின் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளையில் அனைத்துத் தரப்பினருக்கம் நம்பகரமானதும் விரைவானதுமான தகவல்களை வழங்குவது தொடர்பாக பொருத்தமான தொடர்பாடல் ஊடகம்?

1. வானொலி
2. முகப்புத்தகம்
3. அக இணையம்
4. இணையம்
5. குறுஞ்செய்தி

16) அலகுப் பொறுப்பு தொடர்பான பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புபட்ட பொருத்தமற்ற விடயம் ஒன்றினைத் தெரிக?

1. சிறு முதலீட்டாளர்கள் நேரடியாக பணத்தை முதலீடு செய்ய முடியாத காரணத்தினால் அவர்களின் சார்பாக அலகுப் பொறுப்பாளர்கள் செயற்படுகின்றனர்.
2. இங்கு இழிவு வைப்பாக ரூபா 1000 த்துடன் முதலீட்டை ஆரம்பிக்கலாம்.
3. இங்கு ஈடுபடுத்தப்படும் முதலீடானது நெகிழ்வு தன்மை கொண்டதாகக் காணப்படும்.
4. அலகுலப் பொறுப்பு முகாமைத்துவக் கம்பனிகளில் இருந்தான வருமானத்திற்கு முதலீட்டாளர் வரி செலுத்துவார்.
5. உரிமை மூலதனமாகக் காணப்படும் போது அலகுப் பொறுப்பு நீண்ட கால முதலீடாகக் கருதப்படும்

17) பின்வரும் கூற்றுக்களில் மிகப் பொருத்தமான கூற்றினை/கூற்றுக்களை தெரிவு செய்க?

A. இராக்கை முறையிலான பொதியிடலில் பொருட்களை இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லக் கூடியவாறு பல தட்டுக்கள் அமைத்து சட்டகங்களில் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு கையாளப்படும்.

B. அரிசி, கருங்கள், மா போன்ற பொருட்களை குவியலாக வைத்திருத்தல் எனும் முறையின் கீழ் உள்ளடக்கப்படும்.

C. ஆடைத் தொழிற்சாலையில் இராக்கை முறையிலான பொதியிடலில் துணி ரோல்கள் இடத்தினை வினைத்திறனாக பயன்படுத்தும் வகையில் அவை களஞ்சியத்தில் கையாளப்படும்.

D. களஞ்சியசாலையொன்றை நிறுவும்பொழுது அதனுடன் இணைந்த கிரயத்தில் களஞ்சிய வாடகை, பினை வைப்பு, காப்புறுதிக் கட்டணம் என்பன உள்ளடக்கப்படும்.

1. A மற்றும் B
2. A மற்றும் C மற்றும் D
3. B மற்றும் C
4. A மற்றும் B மற்றும் C
5. மேற்கூறப்பட்ட அனைத்தும்

www.ikedu.lk

18) சிக்கல் தன்மை கொண்ட வெளிநோக்கிய அமையவியல் முறைக்கு (Heavy out bound logistic system) உதாரணம் ஒன்று?

1. இரசயானப் பொருள் உற்பத்தி
2. விமான உற்பத்தி
3. எரிவாயு உற்பத்தி
4. ஆடை உற்பத்தி
5. நுகர்வுப் பொருள் விநியோக நிறுவனம்

19) சுங்கத்திற்கு பொருள்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அப்பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டு சுங்கத்தினால் ஏற்றுமதியாளனுக்கு வழங்கப்படும் ஆவணம்?

1. இறக்குமதி குறிப்பு
2. ஏற்றுமதி குறிப்பு
3. கப்பல் தளச் சீட்டு
4. குத அனுமதிப் பத்திரம்
5. சுங்கக் குறிப்பு

20) முகாமையாளர்களின் வகிபாகங்களையும் அவற்றிற்குரிய வகிபாகங்களும் முறையே தரப்பட்டுள்ளன.

1.	தலைவர்	A)	முறைசாரா கூட்டங்களை நடாத்துதல்
2.	உத்தியோகபூர்வ பேச்சாளர்	B)	அறிக்கைகள், சஞ்சிகைகள் வாசித்தல், தனிப்பட்ட தொடர்புகளைப் பேணுதல்
3.	இணைப்பு அதிகாரி	C)	ஊழியர்களின் செயற்றிறன்களை மதிப்பிடல்
4.	தகவல் அளிப்பவர்	D)	பங்குதாரர் கூட்டங்கள், ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குதல்
5.	கண்காணிப்பாளர்	E)	கடிதங்கள், தொலைபேசி மூலம் வெளியாட்களுடன் தொடர்புகளைப் பேணுதல்

முகாமையாளர்களின் வகிபாகங்களிற்குரிய உதாரணங்கள் ஒழுங்கே இனங்காண்க?

1. A,D,E,B,C
2. A,B,D,E,C
3. B,D,E,A,C
4. C,D,E,A,B
5. D,B,A,E,C

21) சரியான விடயம் பிழையான முறையில் இடம்பெறுகின்ற போது எந்த விடயம் முகாமைத்துவத்தின் ஊடாக எதிர்பார்க்கப் படுகின்றது?

1. வினைத்திறனுடையதாகும்
2. பயனுறுதியற்றதாகும்
3. வினைத்திறனுடையதும் பயனுறுதியற்றதாகும்
4. பயனுறுதியுடையதாகவும் வினைத்திறனற்றதாகும்
5. வினைத்திறனற்றதாகவும் பயனுறுதியற்றதாகும்

www.kedu.lk

22) திட்டமொன்றினைத் தயாரிக்கும் போது திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்களிற்கான உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன அவற்றிற்கு பொருத்தமான விடயங்கள் முறையே இனங்காண்க?

A. கம்பனி ஒன்றில் உள்ளக வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் அலுவலகம் ஒன்றினை மறுசீரமைத்தல்.

B. ஊழியர்களுடைய மனக்குறைகளைக் கையாளுதல்

C. அரச நிறுவனங்களில் ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் முன்பாக உணவு உட்கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

1. A- செயற்றிட்டம், B- நடைமுறைகள், C- சட்டதிட்டங்கள்
2. A- நிகழ்ச்சித் திட்டம், B- உபாய வழிமுறைகள், C- நடைமுறைகள்
3. A- கொள்கைகள், B- உபாய வழிமுறைகள், C- நடைமுறைகள்
4. A- நோக்கம், B- நடைமுறைகள், C- சட்டதிட்டங்கள்
5. A- நிகழ்ச்சித் திட்டம், B- தந்திரோபாயம், C- நடைமுறைகள்

23) உற்பத்திக் கம்பனியொன்றின் இருப்புத் தொடர்பான தகவல்கள் சில பின்வருமாறு:

ஆண்டுக்குரிய கேள்வி (அலகுகள்)- 1000
கட்டளைக் கிரயம் (கட்டளை ஒன்றிற்கு) ரூபா 5
அலகொன்றின் களஞ்சியப்படுத்தற் கிரயம் (ஆண்டொன்றிற்கு) ரூபா 1.25
முதன்மைக் காலம்- 5 நாட்கள்
அலகொன்றிற்கான கிரயம்- ரூபா 12.5

இந்த உற்பத்திப் பொருளுக்கான சிக்கனக் கட்டளைத் தொகை மற்றும் மறுகட்டளை அலகுகளின் எண்ணிக்கை யாது?

1. 89.44 அலகுகள், 12 நாட்கள்
2. 309.83 அலகுகள், 11 நாட்கள்
3. 309.83 அலகுகள், 18 நாட்கள்
4. 89.44 அலகுகள், 14 நாட்கள்
5. 89.44 அலகுகள், 18 நாட்கள்

24) வைத்தியசாலை கட்டுமானம் தொடர்பில் இக் கட்டுமானத்திற்கு மிகவும் பொருத்தமான தள அமைப்பு எது?

1. செயன்முறைத் தள அமைப்பு
2. உற்பத்திப் பொருள் தள அமைப்பு
3. கலத் தள அமைப்பு
4. நிலையான இடத் தள அமைப்பு
5. தொழிற்பாட்டுத் தள அமைப்பு

www.ikedu.lk

25)பின்வருவனவற்றுள் எது நவீன சந்தைப்படுத்தலின் உப பகுதிகளினுள் உள்ளடக்கப்படமாட்டாது?

1. சந்தைப்படுத்தல் வாடிக்கையாளர்களின் தேவை விருப்பங்களை திருப்தி செய்வதுடன் தொடர்புபட்டதாகும்.
2. அமைப்பொன்றினால் மட்டும் சந்தைப்படுத்தல் செயற்படுத்தப்படுகின்றது.
3. சந்தைப்படுத்தல் பல்வேறு அக்கறைதாரர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.
4. சந்தைப்படுத்தலில் பரிமாற்றமும் செயற்படுத்தப்படுகின்றது.
5. சந்தைப்படுத்தல் பெறுமதி சேர்ப்பிற்கு உதவுகின்றது.

26) இத்தாலியில் இருந்து வருகை தந்த நபரொருவர் ஹந்தான மலைத்தொடரில் சுற்றுலாப் பயணத்தினை மேற்கொண்டு பின்னர் கண்டியில் உள்ள ரோயல் விடுதியில் அவர் தனது இரண்டு நாட்களை செலவிட்டார். **இதன் போது விடுதியறையில் உள்ள கட்டில்கள் சுத்தமான முறையிலும் சொகுசாகவும் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது**. இங்கு கோடிட்ட கூற்றுக்கு பொருத்தமான வாடிக்கையாளர் பெறுமதி கட்டமைப்பொன்றாக இனங்காணப்படுவது?

1. உற்பத்திப் பொருள் மைய நலன்
2. அடிப்படை உற்பத்திப் பொருள்
3. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப் பொருள்
4. விருத்தியாக்கப்பட்ட உற்பத்திப் பொருள்
5. சாத்திய உற்பத்திப் பொருள்

27) பின்வரும் நிதி முகாமைத்துவத் தீர்மானங்களுள் ஒரு முதலீட்டு தீர்மானமாக கருதக்கூடியது?

1. நிறுத்திவைத்தல் இலாபம் தொடர்பான தீர்மானம்
2. வங்கிக் கடன்கள் தொடர்பான தீர்மானம்
3. கடன்பட்டோர் தொடர்பான தீர்மானம்
4. பங்குகளை வழங்குதல் தொடர்பான தீர்மானம்
5. கடன்கொடுத்தோர் தொடர்பான தீர்மானம்

28) ஊழியர்கள் அவர்களின் செயற்றிறனுக்கேற்ப பதவி உயர்வு பெறுவதற்கும் சக ஊழியர்களிடமிருந்தான தேவையற்ற போட்டியினைத் தவிர்ப்பதற்குமான உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பிற்கு மிகவும் பொருத்தமான முறை எது?

1. ஊழியர் பரிந்துரை
2. மரபுரிமைத் திட்டம்
3. உள்ளக வலையமைப்பு
4. வேலை அறிவித்தல்
5. கம்பனி அறிவித்தல் பலகை

29) நிறைவேற்று உதவி முறையினை வலுவூட்டும் முறையொன்றாகவும் தீர்மான உதவி முறைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற தரவுகளையும் தகவல்களையும் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட முறைமை?

1. தீர்மான உதவி முறைமை (DSS)
2. நிறைவேற்று உதவி முறைமை (ESS)
3. முகாமைத்துவ முறைமை (MIS)
4. வணிக நுண்மதித் தகவல் முறைமை (BIS)
5. நிறைவேற்று தீர்மான முறைமை (EDS)

www.ikedu.lk

30) வணிகத் திட்டம் என்பது தொடர்பில் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன, இவற்றுள் மிகச்சிறந்த கருத்தினைத் தெரிக?

1. எதிர்வரும் ஆண்டிற்காக வணிக நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்படும் ஒரு வருடாந்த மதிப்பீடாகும்.
2. எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான சகல நிதிக் கூற்றுக்களையும் உள்ளடக்கிய ஒரு ஆவணமாகும்.
3. வணிகத்திட்டமொன்றில் இயலுமை ஆய்வானது இன்றியமையாத ஒரு கூறாகும்.
4. வணிகத் திட்டத்தின் விரிவான தகவல்களை சுருக்கமாக விளக்குவது வணிக விபரணமாகும்
5. வணிகத்தின் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி நடவடிக்கைகளை விளக்கும் ஒரு ஆவணமாகும்.

பகுதி- B

31) அ. ஆடைத் தொழிற்சாலையொன்றின் பிரதான கருமங்களுள் துணிகள் மற்றும் ஏனைய வளங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி அதனை ஆடையாகப் பெற்றுக்கொள்வது .....என்று அழைக்கப்படும்.

ஆ. வணிகப் பரம்பலின் முக்கியமான இறுதிக் கட்டம்..... ஆகும்.

32) அ. வணிகம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட ஒழுக்க விழுமியத்தினை எழுத்து வடிவில் காட்டும் போது அது..... என்றழைக்கப்படும்.

ஆ. கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி வேறுவகையான பொருளொன்றை உற்பத்தி செய்யும் போது வைக்கோலில் இருந்து கடதாசி உற்பத்தி செய்தல்..... .....எனவும் பாவனையில் இருந்து ஒதுக்கப்படுகின்ற வாகனங்களை உடைத்து இரும்புகளாக மாற்றுதல்..... எனவும் அழைக்கப்படும்.

33) அ. இலங்கை வங்கி, சம்பத் வங்கி என்பன..... .....வங்கிகளாகவும், தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்பன.....வங்கிகளாகவும் காணப்படுகிறது.

www.lkedu.lk

ஆ.ஒரு அலகு நம்பிக்கைப் பொறுப்பை (unit trust) தோற்றுவிக்கும் மூன்று பகுதியினரைப் பெயரிடுக?

1……..

2……..

3……..

34) அ. லங்கா கிளியர் (தனி) கம்பனியானது……..……..எனும் குறியீட்டுப் பெயரின் கீழ் கொடுக்கல் வாங்களுக்கான புதிய அட்டையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆ. அதே நேர மொத்த தீர்பனவு முறைமை (RTGSS), பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை (SSDS) ஆகியன பொதுவாக …….. என அழைக்கப்படும்.

35) அ. நாட்டில் இடம்பெற்ற கொரோனா பிரச்சினையினால் அத்தியவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டது. இதன் போது கட்டுப்பாட்டு விலையின் கீழ் உள்ள பொருட்களுக்கு அதிக விலைகளை அறவிடல், பொருட்களை பதுக்கி வைத்தல் ஆகியன தொடர்பில் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான சட்டரீதியான அதிகாரமுள்ள அமைப்பு…..……..
……. ஆகும்.

ஆ. கொரோனா நோய் (COVID-19)தொடர்பில் துரித பிரதிபலிப்பினை ஏற்படுத்திய உலகளாவியத் தலைமைத்துவ தரப்படுத்தலில் (GRID INDEX- 2020) இன் அடிப்படையில் முதன்மை நாடாக……..……..உம் 9வது நிலையில் ……நாடும் காணப்படுகிறது.

36) அ.நிலைபேறான அபிவிருத்தியின் போது நவீன சமூகத்தின் ……..……மற்றும் ……. போன்ற செயற்பாடுகள் காரணமாக நாளாந்தம் அளவுக்கதிகமான கழிவுப் பொருட்கள் சேர்வதானது பூகோள ரீதியான பிரச்சனையொன்றாக மாறி உள்ளது.

ஆ. தற்போது சிறப்பு எடுப்பனவு உரிமையின் (SDR) அலகொன்றின் பெறுமதி 5 பிரதான நாணயங்களின் நிறையிடப்பட்ட பெறுமதியினை உள்ளடக்குறது. அவையாவன?

……

……

www.ikedu.lk

37) அ. இலங்கைப் போக்குவரத்து சபை.....என்ற வணிக அமைப்பாகவும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்..... என்ற வணிக அமைப்பாகவும், இனங்காணப்படுகின்றது.

ஆ. ஒரு சொத்து ரூபா 10 இலட்சம் பெறுமதியிடப்பட்டு ரூபா 6 இலட்சத்திற்கு காப்புறுதி செய்யப்பட்டது. இதற்கு ரூபா 5 இலட்சம் நட்டம் ஏற்பட்டது. சராசரி வாசகத்தைக் கொண்டிராத ஒரு காப்புறுதிக் கொள்கையைப் பெற்றுக் கொண்ட ஒருவரால் எவ்வளவு நட்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும்?

.....

38) அ. எழுத்துமூலக ஊடகமாகவும் அகரீதியான இலத்திரனியல் முறைக்கு உதாரணமாக .....உம் இலத்திரனியல் அல்லாத முறைக்கு உதாரணமாக ..... உம் கூறலாம்.

ஆ. கணினித் தொழில் நுட்பத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படும் இயந்திரமொன்றின் கைமுறையிலான கருவியொன்றின் (Mechanical Arm device) களஞ்சியசாலையில் பொருள்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் முறை..... ஆகும்.

39) அ. வணிகப் பொருட்கள் விநியோக வழிமுறையில் இடைநடுவராகத் தொழிற்படும் இரண்டு தரப்பினர்கள் முறையே.....மற்றும்..... .....ஆவர்.

ஆ. நாடொன்று பொருட்களை இறக்குமதி செய்வதுடன் ஒப்பிடும்போது குறைந்த கிரயத்தில் உற்பத்தி செய்யமுடியுமாயிருத்தலும் அல்லது உற்பத்தி செய்வதை விட குறைந்த கிரயத்தில் இறக்குமதி செய்தலும்.....என அழைக்கப்படும்.

40) அ. வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தின் போது ஏற்றுமதியாளனுக்கு பணம் செலுத்துவதற்காகப் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஊடகம்..... எனவும் குறிப்பிட்ட நபருக்கு குறிப்பிட்ட தொகைப் பணத்தைச் செலுத்துமாறு வங்கிக்கு பிறப்பிக்கப்படும் கட்டளை ..... உம் ஆகும்.

ஆ. ஐரோப்பிய நாடுகள் கடலுணவு மற்றும் ஏனைய உற்பத்திகளின் இறக்குமதியின் போது வழங்கப்படும் வரிச் சலுகை ..... ஆகும்.

41) அ. தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கினை அடைய முயற்சிப்பவர்..... இலக்கு மற்றும் நோக்கத்தை அடைய முயற்சிப்பவர்.....உம் ஆவார்.

www.ikedu.lk

ஆ. ஒழுங்கமைத்தலின் பிரதான மூலக்கூறுகள் 4 தருக?

1. …….
2. …….
3. …….
4. …….

42) பிரான்ஸிஸ் கம்பனி உற்பத்தி செய்யும் சீமெந்து கல்லொனறின் மதிப்பிடப்பட்ட விற்பனை விலை ரூபா. 50 ஆகும். மாதாந்தம் சீமெந்துக்கல் உற்பத்திக்காக சீமெந்திற்கு ரூபா. 15000 உம், மணலிற்காக ரூபா. 12000 உம், ஊழியர் கூலி 100 சீமெந்துக் கற்களை உற்பத்தி செய்வதற்கு ரூபா. 1000 உம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உத்தேச மாதாந்தச் சீமெந்துக்கல் உற்பத்தி 1200 அலகுகளாகவும் இயந்திர வாடகையின் மாதாந்தக் கட்டணம் ரூபா 13000 செலவாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலே கூறப்பட்டதிலிருந்து

1. ஓரலகு சீமெந்து கல்லை உற்பத்தி செய்வதற்கான பங்களிப்பு யாது?

……

2. இலாப நட்டமற்ற புள்ளி (BEP) யின் அளவு யாது?

……

43) அ. நவீன சந்தைப்படுத்தலின் புதிய போக்குகள் 2 தருக?

1. …….

2……

ஆ. சேவைச் சந்தைப்படுத்தலின் கீழ் வங்கியொன்றில் பௌதீகச் சான்றாக இனங்கானக் கூடிய 2 விடயங்கள்?

1……

2……

44) அ. மலிபன் பிஸ்கட் கம்பனி பாடசாலை மாணவர்களுக்கான கைகளுவுதல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி இருந்தது. இது மேம்படுத்தலில் ……..

…… ஆக இனங்காணப்படும்.

www.lkedu.lk

ஆ. சொத்துக்களின் முதலீட்டிற்கும் அவற்றினால் உழைக்கப்பட்ட விளைவிற்குமிடையே காணப்படும் தொடர்பினைச் சுட்டிக்காட்டும் விகிதம்…….. எனப்படும்.

45) அ. கூறப்பட்ட மூலதனம் ரூபா. 100 மில்லியனை விடக் குறையாதிருக்கும் கம்பனிகள் பங்குச் சந்தையில்……..…இலும் ரூபா. 500 மில்லியனுக்கு மேற்பட்ட கம்பனிகள்…… இலும் பட்டியலிடப்படும்.

ஆ. மனிதவள முகாமையாளர்களில் …… முகாமையாளர்களுக்கு ஆலோசனை மற்றும் உதவுவது ……. முகாமையாளரின் பிரதான கடமையாகும்.

46) அ. விண்ணப்பதாரி ஒருவரை தொழில் இணைக்கும் போது அவரிடமிருந்து கிடைக்கப்படுகின்ற சுயவிபரக் கோவையில் குறிப்பிடப்பட்ட விடங்கள் சரியானவை என்பதற்காக பெறப்படும் குறிப்பிடலின் (reference) முக்கியத்துவங்கள் 2 தருக?

1. …….
2. …….

ஆ. வேலை விபரத்தினுள் ஒரு பகுதியாக …….. உள்ளடக்கப்படும்.

47) தரவு ஒழுங்கமைத்தல் செயன்முறைக்குரிய கருமங்கள் முறையே தருக?

1. …….
2. ……
3. ……
4. ……

48) தகவல் தொழில் நுட்பத்துடன் இணைந்த ஏனைய தொழில்நுட்பங்கள் 3 தருக?

1. …….
2. ……
3. ……

www.lkedu.lk

49) அ. சந்தையின் போட்டி நிலைமைகள், ……..... , ……..... ……. ஆகியன தகவல்களை விரிவாக முன்வைக்கப்படுகின்ற பகுதி சந்தைப்படுத்தல் திட்டமாகும்.

ஆ. வணிகத்திட்டத்தின் கீழ் மனிதவளத் திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள் 2 தருக?

1. ……

2. ……

50) அ) 2019ம் ஆண்டில் 11வது BRICS ஒழுங்கமைப்பு மாநாடு……ல் இடம்பெற்றது. மற்றும் 2019 45வது G7 மாநாடு……ல் இடம்பெற்றது.

ஆ) பின்வரும் ஒவ்வொரு குறியீட்டினாலும் கருதப்படுவது என்ன?

1.  ……

2.  ……...

3.  ……

4.  ……

www.lkedu.lk

தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) மாணவர்களின் கருத்தரங்கு -2020

வணிகக் கல்வி - II	32	T	II	நேரம் - 3 மணித்தியாலம்

சுட்டெண்

அ. மிதுர்சன்
முகாமைத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைக் கழகம்

❖ **அறிவுறுத்தல்கள்:**

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

பகுதி- I

1. வணிகங்கள் தற்காலத்தில் பெருமளவு பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றது. புறச்சூழல் காரணிகள் அச்சுறுத்தலாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் வணிகங்கள் தமது நாளாந்த கருமங்களைச் செவ்வனே செய்ய முடியாமல் போகின்றது. உதாரணமாக தற்காலத்தில் இடம்பெற்ற கொரோனா நோய் தொற்றால் வணிகங்கள் தம்மீதும் நாட்டின் மீது அக்கறை செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் சில உற்பத்திகளின் கேள்வியும் அதிகரித்துள்ளது. மற்றும் உள்ளூர் உற்பத்திகளும் பெருகியுள்ளது. இவற்றிற்கு மேலதிகமாக அரசானது நாணயப் பெறுமதி இறக்கத்தையும் மேற்கொண்டுள்ளது.

I. அ. மேலே குறிப்பிடப்பட்டவற்றில் இருந்து கடந்தகாலத்துடன் ஒப்பிடும் போது தற்காலத்தில் வணிகங்கள் எதிர்நோக்கும் சவால்களைக் குறிப்பிடுக? **(3 புள்ளிகள்)**

ஆ. இதன் போது சவர்க்கார உற்பத்தி அதிகரித்தால் அதனுடன் தொடர்புடைய உற்பத்திக்காரணிகளைக் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

II. அ. இடரொன்று காணப்படல் வணிகமொன்றில் காணப்படும் பண்பு ஒன்றாகும். எனவே மேலே குறிப்பிடப்பட்டவற்றில் இருந்து வணிகமொன்று இந்த இடரை எதிர் கொள்ள மேற்காள்ளும் நடவடிக்கைகள் 4 தருக? **(3 புள்ளிகள்)**

ஆ. வணிக வெளிமூலங்கள் என்பதனை உதாரணத்துடன் விளக்குக? **(3 புள்ளிகள்)**

III. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட நிலையில் தகவல் தொழில்நுட்பக் கல்வியின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் எவை? **(2 புள்ளிகள்)**

IV. வணிகங்கள் இலாபம் உழைப்பதற்கு மேலாக சமூகப் பொறுப்பினைப் பேணும் வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை உதாரணத்துடன் விளக்குக? **(3 புள்ளிகள்)**

V. நாணயமாற்று விகித மதிப்பேற்றத்தின் விளைவுகளைக் குறிப்பிடுக? **(4 புள்ளிகள்)**

www.ikedu.lk

2. வணிகம் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் தேவைப்பாடு தொடர்பாக கூடிய அவதானமொன்று தற்காலத்தில் விருத்தியடைந்துள்ளது.

I. அ) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும், சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் பல வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. அவ்வாறான காரணிகளை குறிப்பிட்டு விளக்குக? (04 புள்ளிகள்)

ஆ) சமூக கலாசாரம் நிலைபேறானது என்பதனை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

II. வணிகங்கள் வணிக ஒழுக்கத்தை எவ்வாறு வாடிக்கையாளர்கள், சந்தைப்படுத்தல், கணக்கீடு மற்றும் மனிதவளங்களில் பின்பற்றப்படுகின்றன என்பதனை உதாரணம் மூலம் விளக்குக? (04 புள்ளிகள்)

III. இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் அண்மையில் நிவாரண உதவியாக உலர் உணவுப் பொருட்களை பொது மக்களிற்கு வழங்கியிருந்தது இதனால் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் எவை? (03 புள்ளிகள்)

IV. அரசு வணிகங்களில் செல்வாக்கு செலுத்துகின்ற முறையினை உதாரணத்துடன் விளக்குக? 03 புள்ளிகள்)

V. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

3.

I. பங்குதாரர்கள் ஒரு கம்பனியின் உறுப்பினர்கள் ஆவர். ஆனால் தொகுதிக் கடன்களை வைத்திருப்போர் கடன்கொடுத்தோர் ஆவர். இந்த இரு பிரிவினரும் ஒரு கம்பனியின் விவகாரங்களில் எவ்வாறு செல்வாக்கு செலுத்த முடியும் என விளக்குக? **(3 புள்ளிகள்)**

II. 2015ம் ஆண்டு விமல் என்பவர் சொந்தமாக பேக்கறி ஒன்றினை ஆரம்பித்தார். இவ் வணிகத்திற்கு அனுபவமுடைய ஊழியர்களையும் இணைத்துக் கொண்டார். இவ் வணிகம் மிகக் குறுகிய காலத்தில் அதிகளவான பாண் மற்றும் ஏனைய சிற்றுண்டிகளின் விற்பனையினாலும் பல்வேறுபடுத்தல் மூலமும் பாரிய வளர்ச்சியடைந்தது.

சில வருடத்தின் பின் ஜஸ்கிறீம் உற்பத்தியாளனான தனுஸ் உடன் இணைந்து பங்குடைமை வணிகமொன்றைத் தோற்றுவித்தார். இவர்கள் பங்குடைமை உடன்படிக்கை ஒன்றை உருவாக்கியிருந்தனர். இதன்படி விமல் வியாபாரம் தொடர்பாக அக்கறை செலுத்தியதுடன் நிறுவனக் கணக்குகளை தனுஸ் முகாமை செய்தார். விமல் நோய்வாய்ப்பட்டதால் அவர் சிறிது காலத்தில் நிறுவனத்தில் இருந்து உறங்கும் பங்காளனாக மாறினார். இந்நிலையில் தனுஸ் பங்குடைமையின் ஒப்பந்த மாற்றத்துடன் இவ் வணிகத்தினை வரையறுத்த ரோயல் தனியார் கம்பனி ஒன்றாக மாற்றினார்.

www.ikedu.lk

அ) விமல் மற்றும் தனுஸின் பங்குடைமை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்களைத் தருக? **(3 புள்ளிகள்)**

ஆ) இப் பங்குடைமையினை கம்பனியாக மாற்றியதன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களைக் குறிப்பிடுக? **(3 புள்ளிகள்)**

III. பேக்கறி மற்றும் ஜஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்களின் இனைப்பு எவ்வகையானது என்பதனை விளக்குக? **(2 புள்ளிகள்)**

IV. இன்டநெட் வங்கி முறைமை (E-Banking system) தற்காலத்தில் அதிக பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதனை இனங்கணலாம். அந்த வகையில் இதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் சேவைகள் எவை? **(4 புள்ளிகள்)**

V. அ) அங்கீகார வணிகத்துடன் தொர்புடைய இரு தரப்பினர்களையும் குறிப்பிட்டு அவற்றிற்கான உதாரணங்களையும் குறிப்பிடுக? **(3 புள்ளிகள்)**

ஆ) அங்கீகார வணிகங்கள் தொடர்பாக வாடிக்கையாளரின் நாட்டம் அதிகரிப்பதற்கான காரணங்கள் எவை? **(2 புள்ளிகள்)**

4.

I. பல்வேறுபட்ட சிறுசிறு முதலீட்டாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட நிதியினை பயன்படுத்தி அலகுப் பொறுப்பில் முதலீடுகளை மேற்கொள்வதன் பண்புகளைக் குறிப்பிடுக? **(4 புள்ளிகள்)**

II. அ) வணிகங்களின் பல்வேறு செயற்பாடுகளிலும் குத்தகைக் கம்பனிகள் தொடர்புபடும் விதத்தினை விளக்குக? **(3 புள்ளிகள்)**

ஆ) காசோலைகள் வங்கிகளிற்கிடையே பரிமாற்றப்படுகின்ற போது லங்கா கிளியர் தனியார் கம்பனியின் தொழிற்பாட்டினை குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

III. அ) பொறுப்புக் காப்புறுதி என்பதனை விபரிக்குக? **(2 புள்ளிகள்)**

ஆ) நுகர்வோனின் வீடு வரையான விநியோகம் என்ற வகையில் பிக் மீ (pick me) ஊபர் (uber) எனப்படுகின்ற துரித உணவு விநியோகம்(fast food distribution) பெருமளவு பிரசித்தி அடைந்துள்ளது. இம்முறையின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் எவை? **(3 புள்ளிகள்)**

இ) முறைசாராத் தொடர்பாடல் முறைகள் பெருமளவில் வாடிக்கையாளர்களைக் ஈர்க்கக் கூடியதாகவுள்ளது. முறைசாராத் தொடர்பாடல் முறைகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கான உதாரணங்களையும் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

IV. அ) வெளிநாட்டு வியாபாரத்தின் நவீன போக்குகளைக் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

ஆ) இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறையினைக் குறிப்பிட்டு விளக்குக? **(2 புள்ளிகள்)**

www.lkedu.lk

பகுதி-II

5.

I. வணிகத்தின் உற்பத்திக் காரணிகளுள் மனித வளத்தை முகாமை செய்வது பிராதானமாகக் கருதப்படுவதன் காரணம் என்ன? **(3 புள்ளிகள்)**

II. அ) முகாமைத்துவ செயன்முறைகளானவை திட்டமிடலில் ஆரம்பித்து கட்டுப்படுத்தலில் முடிவடைகின்றது. இவற்றிற்கிடையிலான உள்ளார்ந்த ரீதியிலான தொடர்பினை விளக்குக? **(3 புள்ளிகள்)**

ஆ) தீர்மானமெடுத்தல் செயன்முறைகளுக்குரிய படிமுறைகளை உதாரணத்தினூடாக விளக்குக? **(3 புள்ளிகள்)**

III. அ) இலட்சிய நோக்கக் கூற்றினைத் தயாரிக்கும் பொழுது கவனத்தில் கொள்ளப்படும் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயற்றிட்டங்களுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

ஆ) நிறுவனமொன்றின் வெற்றிக்கு ஒழுங்கமைத்தலின் முக்கியத்தினைக் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

IV. அ) ஒரு தலைவரின் நடத்தைப் பாங்கானது குறிக்கோளையும் ஊழியரையும் உச்சமட்டத்தில் மையப்படுத்திய தலைமைத்துவம் மிகச்சிறந்த முறையாகும். பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக? **(3 புள்ளிகள்)**

ஆ) ஆடைத் தொழிற்சாலையொன்றில் ஊழியர் ஒருவர் ஒரு மணித்தியாலத்தினுள் 50 ஆடைகளைப் பொதிசெய்ய வேண்டும். ஆனால் அவ் ஊழியன் 40 ஆடைகளை மட்டுமே பொதிசெய்தார். இதற்குப் பயன்படுத்தப்படும் கட்டுப்படுத்தல் நுட்ப முறைகளைக் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

V. கம்பனியொன்றின் கடந்த மாதத்திற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

	ரூபா
அலகொன்றின் விற்பனை விலை	100
அலகொன்றின் மாறும் கிரயம்	20
மாதத்திற்கான நிலையான கிரயம்	240,000
ஏதிர்பார்க்கப்பட்ட இலாபம்	200,000

மேலே தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உத்தேச இலாபத்திற்கான விற்பனை அலகுகள்? **(2 புள்ளிகள்)**

www.lkedu.lk

6.

I. அ) களஞ்சியசாலையில் இருப்புக்களானவை உச்ச இருப்பு மட்டத்தை விஞ்சாதும் இழிவு இருப்பு மட்டத்தைவிடக் குறையாதும் பேணப்படுவதன் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

ஆ) இருப்புக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய இருப்பு மட்டங்களைக் குறிப்பிட்டு விபரிக்க? **(2 புள்ளிகள்)**

II. அ) பின்வருவனற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக?

A. முதன்மைக் காலம்

B. தரக்கட்டுப்பாட்டுச் செயன்முறை **(2 புள்ளிகள்)**

ஆ) பொருட்களுடன் ஒப்பிடும் போது சேவைச் சந்தைப்படுத்தல் மாறிகளில் காணப்படும் குறைபாடுகளையும் அவற்றில் இருந்து வெளிவருவதற்காக பயன்படுத்தப்படும் தந்திரோபாய வழிமுறைகளையும் குறிப்பிடுக? **(3 புள்ளிகள்)**

III. ஆஸிறி வைத்தியசாலையானது கண்டியில் முதன்மைத் தனியார் வைத்தியசாலை ஒன்றாகக் காணப்படுகின்றது. இது தரமான சுகாதாரச் சேவையினை வழங்கி வருகின்றது. மற்றும் மருத்துவ, அறுவை சிகிச்சையினையும் வழங்கிவருகின்றது. இவ் வைத்தியசாலையானது தனித்துவமான மற்றும் விசேடமான சேவையினை வழங்கியமைக்காக விருதினையும் பெற்றுக் கொண்டது.

ஆஸிறி வைத்தியசாலையால் வழங்கப்படும் சுகாதார சேவையினை வாடிக்கையாளர் பெறுமதிக் கட்டமைப்பைக் கொண்டு விளக்குக? **(4 புள்ளிகள்)**

IV. அ) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கரு என்றால் என்ன? **(2 புள்ளிகள்)**

ஆ) வணிக வங்கியொன்றின் சந்தைத்துண்டமாக்கல் பற்றி விளக்குக? **(2 புள்ளிகள்)**

V. மேம்படுத்தல் கலவையில் பொதுமக்கள் தொடர்பு, நிகழ்வு மற்றும் அனுபவம் போன்ற சந்தைப்படுத்தல் என்பவற்றை உதாரணங்களுடன் விளக்குக? **(3 புள்ளிகள்)**

7.

I. அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் முக்கியத்துவத்தினைப் பட்டியலிடுக? **(3 புள்ளிகள்)**

ஆ) நிதிவிகிதங்களுள் திரவ விகிதம் மற்றும் இலாபத்தன்மை விகிதம் என்பவற்றிற்கு இடையிலான தொடர்பினை விளக்குக? **(2 புள்ளிகள்)**

www.ikeou.lk

II. அ) வரையறுத்த ராம் நிறுவனத்தின் 31.03.2020 இற்கான நிதிநிலைமைக் கூற்று பின்வருமாறு

	ரூபா
நடைமுறைச் சொத்துக்கள்	
காசு	36 000
கடன்பட்டோர்	300 000
சரக்கிருப்பு	360 000
முற்செலுத்திய செலவுகள்	3 000
நடைமுறைப் பொறுப்பு	
கடன் கொடுத்தோர்	450 000
அட்டுறு செலவுகள்	60 000
செலுத்த வேண்டிய வருமான வரி	18 000

மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

a. தேறிய தொழிற்பாட்டு மூலதனம்
b. நடைமுறை விகிதம்
c. விரைவு விகிதம்
d. இவ் வணிகத்தின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பவற்றின் சராசரி முறையே 2.0, 1.5 ஆகக் காணப்படின் வரையறுத்த ராம் நிறுவனத்தின் திரவத்தன்மையானது சிறந்ததா? அல்லது இது வணிகத்திற்கு உகந்ததல்லவா?

(5 புள்ளிகள்)

III. கனிஸ்க என்பவர் தன்னிடமுள்ள ரூ. 1000 000 பணத்தை கொழும்புப் பங்குச் சந்தை ஒன்றில் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதா? அல்லது திறைசேரி உண்டியல்களில் முதலிடுவதா? என்ற குழப்பத்தில் உள்ளார். மேற்கூறப்பட்ட முதலீடுகளில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான உமது பரிந்துரை யாது? **(5 புள்ளிகள்)**

IV. நிதி மூலங்களை இடைநடுவர் நிலையாளர் பங்களிப்பின் அடிப்படையில் வகைப்படுத்தி அவற்றிற்கான உதாரணங்களையும் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

V. கொழும்புப் பங்குப் பரிமாற்றகம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களைப் பட்டியலிடுக? **(3 புள்ளிகள்)**

8.

I. மனிதவளத் திட்டமிடலினை மேற்கொள்ளும் போது மனித வளத்திற்கான கேள்வியை தீர்மானிக்கும் அகச்சூழல் மற்றும் புறச்சூழல் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக?

(4 புள்ளிகள்)

II. ஏனைய மனிதவள முகாமைத்துவக் கருமங்களானவை வேலைப்பகுப்பாய்வில் தங்கியுள்ளது. இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீர்களா விளக்குக? **(4 புள்ளிகள்)**

www.lkedu.lk

III. அ) இணைத்துக் கொள்ளுதல் செயன்முறையில் சமூகமயப்படுத்தலின் செயற்பாடுகளை விளக்குக? **(2 புள்ளிகள்)**

ஆ) இணையத்தின் மூலமான ஆட்சேர்ப்பு முறைகள் தற்காலத்தில் பிரசித்தியடைந்துள்ளன அவற்றிற்கான உதாரணங்களைக் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

IV. அ) தகவல் முகாமைத்துவத் தொழினுட்பம் என்றால் என்ன? **(3 புள்ளிகள்)**

ஆ) நிறைவேற்றுத்தர அலுவலர்கள் பயன்படுத்தும் தகவல் முறைமையைக் குறிப்பிடுக? **(2 புள்ளிகள்)**

V. செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்கும் போது உள்ளடக்கப்பட வேண்டிய காரணிகளை காரணத்துடன் விளக்குக? **(3 புள்ளிகள்)**

www.lkedu.lk